

தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்க்க இன்று அமெரிக்காவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (26.8.2024) இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், துணைச் செயலாளர் வீரபாண்டியன் ஆகியோர் சந்தித்து, பயணம் வெற்றி பெற வாழ்த்து தெரிவித்தனர்.

### ஆவடி மகாலட்சுமி கல்லூரியில்

## மாபெரும் மாரத்தான் போட்டி!

### ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்

திருவள்ளூர், ஆக 27 நிலச்சரிவில் மீண்ட கேரளா வயநாடு மக்களுக்காக திரட்டப்பட்ட ஆவடி பருத்திபட்டு மகாலட்சுமி அறிவியல் மற்றும் கலைக் கல்லூரி சார்பில் மாபெரும் மாரத்தான் ஓட்டம் கல்லூரி நிர்வாகம் சார்பில் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளரும் ,ஆவடி சட்டமன்ற உறுப்பினருமான சாமு.நாசர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இதில் 3000பேர் கலந்து கொண்டனர் முதலிடம் பிடித்த. மணிகண்டன் ரூ. 10,000/, இரண்டாமிடம் பிடித்த அருண்கிருஷ்ணன் அவர்களுக்கு ரூ.5000/ மூன்றாமிடம் பிடித்த பெங்களூருவை சார்ந்த சுரேஷ்குமார் அவர்களுக்கு மூன்றாம் பரிசாக ரூ.3000/ வழங்கப்பட்டது.

கேரளாவின் வயநாட்டில் உறவுகளை இழந்துள்ளவர்களுக்கும் ஆதரவாக சுமார் 5 லட்சம் நிதி திரட்ட இந்த மாரத்தான் ஏற்பாடு செய்யப்பட்டது. வயநாடு நிலச்சரிவில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் தனிநபர்களுக்கு இந்த நிதி கேரளா அரசின் மூலம் அளிக்கும் வகையில் வயநாடு மக்களுக்கு ஆதரவளிக்கும் நோக்கத்துடன் மாரத்தான் நிகழ்வை கல்லூரி நிர்வாகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் ஆவடி மாநகர மேயர் உதயகுமார், மண்டல குழு தலைவர் ஜி. ராஜேந்திரன் , திருவேற்காடு நகர மன்ற தலைவர் என்.இ.கே. மூர்த்தி மற்றும் மகாலட்சுமி அறிவியல் மற்றும் கலைக்கல்லூரியின் இயக்குனர் திருக்குமரன், கல்லூரியின் தாளாளர் குமுதிணி, உள்ளிட்ட நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மூத்த தலைவர் ஆர்.நல்லக்கண்ணு அவர்களிடம், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு 100 ரூபாய் நாணயத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் வழங்கினார்.



# வடசென்னை வளர்ச்சித் திட்டப் பணிகள்!

முதல் பக்கத் தொடர்ச்சி

அதனைத் தொடர்ந்து, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் சென்னை, வில்லிவாக்கம், பாடி மேம்பாலத்தின்கீழ், சிவசக்தி காலனியில் சுமார் 3.93 ஏக்கர் பரப்பளவில் 53.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 1,25,402 சதுர அடி கட்டடப் பரப்பளவில் தரைதளத்தில் 64 கடைகளும், அலுவலக அறையும், இரு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடமும், முதல் தளத்தில் 70 கடைகளும் இரண்டாம் தளத்தில் உணவு விடுதி வளாகம் உட்பட 54 கடைகளும், முற்றத்தில் மீன் வள அமைப்புகள் என மொத்தம் 188 கடைகளுடன் அமைக்கப்படவுள்ள சர்வதேச தரத்திலான கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையம்;

சென்னை, இராயபுரம் மூலகொத்தலத்தில் சுமார் 0.67 ஏக்கர் பரப்பளவில் 14.31 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 41,593 சதுர அடி கட்டட பரப்பளவில் அடித்தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் கூடிய சமுதாய நலக்கூடம்;

சென்னை, புரசைவாக்கம், கான்ரான் ஸ்மித் சாலையில் சுமார் 1.04 ஏக்கர் பரப்பளவில் 11.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 45,198 சதுர அடி கட்டடப் பரப்பளவில் தரைதளத்தில் சலவைக் கூடங்கள், இயந்திரக் கூடங்கள், துவைக்கும் கூடங்கள், உலர்த்தும் இயந்திரங்கள் மற்றும் துணி தேய்க்கும் இடம், இரு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடமும், முதல் தளத்தில் துணி உலர்த்தும் இடம், என 60 அறைகள் கொண்ட நவீன சலவைக்கூடம்;

புழல் ஏரிக்கரையில் சுமார் 8.17 ஏக்கர் பரப்பளவில் 16.96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபாதை, இயற்கைக் காட்சி அமைப்புடன் கூடிய உயர்மட்ட நடைபாதை, மியாவாக்கி காடு வளர்ப்பு, குழந்தைகளுக்கான கண்காட்சி இடம், இயற்கை குளம், குடிநீர் மற்றும் நவீன கழிப்பறை போன்ற அனைத்து வசதிகளுடன் மேம்படுத்தப்படவுள்ள புழல் ஏரிக்கரை;



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.8.2024) வடசென்னை வளர்ச்சித் திட்ட விரிவாக்கப் பணிகளின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் சென்னை, வில்லிவாக்கம், பாடி மேம்பாலத்தின்கீழ், சிவசக்தி காலனியில் சுமார் 3.93 ஏக்கர் பரப்பளவில் 53.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள சர்வதேச தரத்திலான கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையத்திற்கு அடிக்கல் நாட்டி, அதன் மாதிரி வடிவமைப்பினை பார்வையிட்டார். உடன் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

ரெட்டேரி ஏரிக்கரையில் சுமார் 4.38 ஏக்கர் பரப்பளவில் 13.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நுழைவாயில் அரங்கம், இணைக்கும் பாலங்கள், இயற்கை தோட்டம் மற்றும் பூங்கா, நடைபாதை, சூரிய மின்கலம் கொண்ட நிழல் இருக்கைகள், உடற்பயிற்சி கூடங்கள், குழந்தைகளுக்கான விளையாட்டு பகுதி, வாகன நிறுத்துமிடங்கள், குடிநீர் மற்றும் நவீன கழிப்பறை போன்ற அனைத்து வசதிகளுடன் மேம்படுத்தப்படவுள்ள ரெட்டேரி ஏரிக்கரை;

கொளத்தூர் ஏரிக்கரையில் சுமார் 0.4 ஏக்கர் பரப்பளவில் 6.26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இயற்கை நடைபாதை, படகு சவாரி, குழந்தைகளுக்கான விளையாட்டு பகுதி, செயற்கை நீர்வீழ்ச்சி, இசை பூங்கா, ஒளிரும் மீன் சிற்பங்கள், குடிநீர் மற்றும் நவீன கழிப்பறை போன்ற அனைத்து வசதிகளுடன் மேம்படுத்தப்படவுள்ள கொளத்தூர் ஏரிக்கரை;

**என மொத்தம் 115.58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6 புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

### முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தல்

கொளத்தூர், நேர்மை நகரில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் 2.50 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மண்டல உதவி ஆணையாளர் அலுவலகம், கொளத்தூர், ஜி.கே.எம் காலனி, ஜம்புலிங்கம் தெருவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகம், அயனாவரம், சி.கே. சாலையில் 2.27 கோடி ரூபாய் செலவில் நவீன சலவைக் கூடம் மற்றும் 45 இலட்சம் ரூபாய் செலவில் 3 நியாய விலைக் கடைகள்;

**என மொத்தம் 5.22 கோடி செலவில் முடிவுற்றப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மீன்வளம் மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.சுதர்சனம், தாயகம் கவி, வெற்றியழகன், ஆர். மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர், ஆர்.டி.சேகர், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ் குமார், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு வாரியத் தலைவர் ப.ரங்கநாதன், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன் சி.எம்.டி.ஏ. முதன்மைச் செயல் அலுவலர் அ.சிவஞானம், உணவுப் பொருள் வழங்கல் துறை ஆணையர் த. மோகன், மீன்வளத் துறை ஆணையாளர் (பொ) திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, கண்காணிப்பு அலுவலர் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்கக இயக்குநர் பா.கணேசன், மத்திய வட்டார துணை ஆணையர் கே.ஜெ.பிரவீன் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### திருவள்ளூர் கிழக்கு மாவட்ட

## ஒன்றிய, நகர, பேரூர்க் கழக ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

திருவள்ளூர், ஆக. 27- திருவள்ளூர் கிழக்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெறும் விவரம் குறித்து மாவட்டக் கழகச் செயலாளர் டி.ஜெ. கோவிந்தராஜன் எம்.எல்,ஏ அறிவிப்பு வருமாறு:

நாள்- நேரம் - கிழமை, ஒன்றிய - நகர- பேரூர் கழகங்கள், ஒன்றிய/ நகர/ பேரூர் செயலாளர்கள்,

01.09.2024 காலை:10.00 மணி ஞாயிற்றுக்கிழமை, சோழவரம் வடக்கு ஒன்றியம், நா.செல்வசேகரன்,

03.09.2024 காலை:10.00 மணி செவ்வாய்கிழமை, எல்லாபுரம் வடக்கு ஒன்றியம், ஜெ.மூர்த்தி,

03.09.2024 மாலை:4.00 மணி செவ்வாய்கிழமை, எல்லாபுரம் தெற்கு ஒன்றியம், ஆ.சத்தியவேலு,

04.09.2024 காலை:10.00 மணி புதன்கிழமை, கும்முடிப்பூண்டி மேற்கு ஒன்றியம், மு.மணிபாலன்,



04.09.2024 மாலை:4.00 மணி புதன்கிழமை, கும்முடிப்பூண்டி கிழக்கு ஒன்றியம் ந.பரிமளம்,

05.09.2024 காலை:10.00 மணி வியாழக்கிழமை, கும்முடிப்பூண்டி தெற்கு ஒன்றியம் கி.வே.ஆனந்தகுமார்,

05.09.2024 மாலை:4.00 மணி வியாழக்கிழமை, கும்முடிப்பூண்டி பேரூர் இரா. அறிவழகன்,

06.09.2024 காலை:10.00 மணி வெள்ளிகிழமை, மீஞ்சூர் வடக்கு ஒன்றியம் பா.சுகுமாறன்,

06.09.2024 மாலை:4.00 மணி வெள்ளிகிழமை மீஞ்சூர் தெற்கு ஒன்றியம் கா.சு. ஜெகதீசன்,

07.09.2024 காலை:10.00 மணி சனிக்கிழமை,, பொன்னேரி நகரம் ஜி.ரவிக்குமார்,

07.09.2024 மாலை:4.00 மணி சனிக்கிழமை, ; மீஞ்சூர் கிழக்கு ஒன்றியம எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ்,

08.09.2024 காலை:10.00 மணி ஞாயிற்றுக்கிழமை,, பூண்டி கிழக்கு ஒன்றியம் டி.கே.சந்திரசேகர்,

08.09.2024 மாலை:4.00 மணி ஞாயிற்றுக்கிழமை, பூண்டி வடக்கு ஒன்றியம், ஜான் (எ) பொன்னுசாமி,

09.09.2024 காலை:10.00 மணி திங்கட்க்கிழமை, ஊத்துக்கோட்டை பேரூர், அபிராமிகுமரவேல்,

09.09.2024 மாலை:3.00 மணி திங்கள்கிழமை ஆரணி பேரூர், பி.முத்து,

09.09.2024 மாலை:6.00 மணி திங்கள்கிழமை மீஞ்சூர் பேரூர், க.சு.தமிழ்உதயன்,

பொது உறுப்பினர் கூட்டங்களில் க.சுந்தரம், இஏபி. சிவாஜி, மு.பகலவன், ஜெ.மூர்த்தி, மு.கதிரவன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், மாநில நிர்வாகிகள் சி.எச். சேகர், கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ஏ.ஆர்.டி.உதயசூரியன பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.வி.ராமமூர்த்தி, கே.சுப்பிரமணி, பா.செ.குணசேகர், பி.வெங்கடாசலபதி, டாக்டர்.பரிமளம் விஸ்வநாதன் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள் எனவே சம்பந்தப்பட் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் முறையாக கூட்ட அமைப்பிதழ்களை அச்சிட்டு கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக முன்னோடிகள் கிளைக் கழக செயலாளர்கள் பிரதிநிதிகள் பாக முகவர்கள் அனைவரும் பங்கேற்கும் விதமாக பொது உறுப்பினர் கூட்டத்தை சிறப்பாக ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு டி.ஜெ. கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.

### தயாநிதி மாறன் எம்.பி. தொடர்ந்த அவதூறு வழக்கில் - இன்று

## சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் எடப்பாடி பழனிசாமி நேரில் ஆஜராகிறார்!

சென்னை, ஆக. 27- தயாநிதி மாறன் எம்.பி. தொடர்ந்த அவதூறு வழக்கின் விசாரணைக்காக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் இன்று நேரில் ஆஜராக உள்ளார்.

மக்களவைத் தேர்தல் பிரச்சாரத்தின் போது, மத்திய சென்னை தொகுதி தே.மு.தி.க. வேட்பாளர் பார்த்தசாரதியை ஆதரித்து பிரச்சாரம் செய்த அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, மத்திய சென்னை எம்.பி.யாக இருந்த தயாநிதி மாறன், தொகுதி மேம்பாட்டு நிதியை முறையாக செலவிடவில்லை எனக் கூறிருந்தார்.

இந்த பேச்சுக்கு மறுப்பு தெரிவித்த தயாநிதி மாறன், எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக எழும்பூர் நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள எம்.பி., எம்.எல்.ஏக்கள். மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது.

சிறப்பு நீதிமன்றத்தில் இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வர உள்ள நிலையில், எடப்பாடி பழனிச்சாமி நேரில் ஆஜராக இருப்பதாக அ.தி.மு.க. வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



குன்றத்தூர் நகராட்சிக்குட்பட்ட துப்புரவுப் தொழிலாளர்களுக்கு அறுசுவை உணவு மற்றும் சீருடைகளை குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். அருகில் குன்றத்தூர் நகர மன்றத் தலைவர் கோ.சத்தியமூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.